OS 400/2021

வா.சா. 1 வெங்கடேசன் த/பெ கிருஷ்ணன்

நாள் 12.02.2025

**<u>4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

11. எனக்கு 2015 ம் ஆண்டு வில்லங்கம் போட்டு பார்த்தபோது தாவா சொத்தில் ஏற்கனவே வில்லங்கம் இருப்பது தெரியவந்தது என்றால் சரிதான். அவ்வாறு வில்லங்கம் போட்டு பார்த்த போது 2011ல் சுந்தரம் பைனாஸ்ஸில் தாவா சொத்து ஏற்கனவே ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள விவரம் தெரியவந்தது என்றால் சரிதான். அவ்வாறு நான் அடமானம் போட்ட சொத்து 2011ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள விவரம் தெரிந்து 3 வருடங்குளுக்குள் வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

12. அண்ணாமலை 2021ம் ஆண்டில் இறந்தார் என்றால் சரிதான். அண்ணாமலை இறந்த பிறகு அவரது வாரிசுகள் மீது தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அடமானம் போட்ட சொத்து ஏற்கனவே 2011ல் சுந்தரம் பைனாஸ்ஸில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதால் அவர்களுக்கு சேரவேண்டிய கடன் தொகை போக மீதம் உள்ள தொகையை தான் நான் அடமானம் மூலம் கோர முடியும் என்றால் சரிதான். சுந்தரம் பைனாஸ்ஸில் அண்ணாமலை வாங்கிய கடனை அண்ணாமலை இறந்த பிறகு நான் பைசல் செய்யவில்லை என்றால் சரிதான்.

13. நான் அடமானம் போட்ட சொத்தினை அதற்கு முன்னரே 4மற்றும் 5ம் பிரதிவாதிகளிடம் இறந்த அண்ணாமலை கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டுள்ளார் என்றால் சரிதான். அந்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவ்வாறு 4 மற்றும் 5ம் பிரதிவாதிகளிடம் கிரைய ஒப்பந்த தொகையை பெற்று தான் இறந்த அண்ணாமலை சுந்தரம் பைனாஸ்ஸில் இருந்த கடனை செலுத்தி பைசல் செய்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

14. அண்ணாமலை உயிருடன் இருந்த வரையில் அடமான கடன் குறித்து நேரிலோ அல்லது வழக்கறிஞர் அறிவிப்பு மூலமாகவோ நான் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். தாவா அடமானம் சரியான பிரதிபலனுக்கு ஏற்படுத்தப்பட்டதல்ல என்றால் சரியல்ல. அவ்வாறு அண்ணாமலை அடமான பத்திரம் மற்றும் ஆவணங்களை எழுதி வாங்கிக் கொண்டு அவரை மிரட்டியதால் தான் அவர் தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல.

15. அவ்வாறு அண்ணாமலை தற்கொலை செய்து கொண்டு இறந்தது சம்மந்தமான வழக்கு என் பெயரிலும் மற்றும் சிலர் பெயரிலும் நிலுவையில் உள்ளது என்றால் வழக்கு நிலுவையில் உள்ளது உண்மை ஆனால் என் பெயரில் அந்த வழக்கு இல்லை. அந்த வழக்கு யார் யார் பெயரில் நிலுவையில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் சம்மந்தப்பட்ட வெங்கடேசன் த/பெ கிருஷ்ணன் யார் என்றால் அது நான் தான் வழக்கு என் மீது தாக்கல் செய்யப்பட்டு பின்னர் அது முடிக்கப்பட்டு விட்டது. அந்த வழக்கு பொய்யான வழக்கு என் மீது தாக்கல் செய்யப்பட்டதாகும். என் மீதும் மற்றம் மூவர் மீதும் வளத்தி காவல் நிலைய குற்ற எண்.478/2021 பிரிவு 306 இதச படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் உண்மை தான் ஆனால் அது பொய் வழக்கு ஆகும். அண்ணாமலை எனக்கு சட்டப்படி எந்த ஆவணமும் எழுதி கொடுத்து கடன்பெறவில்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. சட்டப்படியான ஆவணம் தான் எழுதி கொடுத்துள்ளார். தாவா அடமானம் பத்திரம் சரியான பிரதிபலனுக்கு ஏற்படுத்தப்பட்டதல்ல என்றால் சரியல்ல.